# Tnpsc Model Question Paper 14 – General Tamil

Click Here to Download More Tnpsc Tamil Model Questions

1. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க: (கண்ணெழுத்து)
**(அ) சங்க காலத்தில் ஓவியங்களை ------ என்று அழைத்தனர்.**
(ஆ) நேர்கோடு, வளைகோடு கொண்டு வரையப்பட்ட ஓவியங்களை --------- என்று அழைத்தனர்
(இ) வண்ணங்கள் குழப்பும் பலகையை ------------ என்று அழைத்தனர்.
(ஈ) கரித்துண்டுகளால் வரையப்படும் ஓவியங்களை ------- என்று அழைத்தனர்.

2. அடைப்புக்குள் உள்ள ஒலி மரபுச் சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க:
(பேசும்)
(அ) குயில் ------- (ஆ) மயில் ------- **(இ) கிளி ---------** (ஈ) கூகை ---------

3. சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு:
இது கோவிலா தேரா என்று தெரியவில்லை. --------- தான் குழப்பத்துடன் பார்த்தேன்.
(அ) உடனே **(ஆ) அதனால்** (இ) மேலும் (ஈ) ஏனெனில்

4. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு:
நெல்லையப்பர் கோவில் -------- உள்ளது?
(அ) எவ்விடம் **(ஆ) எங்கு** (இ) ஏன் (ஈ) எதற்கு

5. பொருத்தமான காலம் கண்டறிக:
(அ) போட்டியில் வென்றார் (நிகழ்காலம்) (ஆ) மேடையில் பேசுகிறான் (எதிர்காலம்)
**(இ) தடுப்பூசி செலுத்தினேன் (இறந்த காலம்)** (ஈ) பள்ளிக்குச் செல்வேன் (இறந்த காலம்)

6. பொருத்தமான காலம் கண்டறிக:
**(அ) மிதிவண்டி ஓட்டுவேன் (எதிர்காலம்)** (ஆ) திடலில் ஓடினேன் (எதிர்காலம்)
(இ) பெயர் சூட்டினார் (நிகழ்காலம்) (ஈ) வீட்டிற்குச் செல்வேன் (நிகழ்காலம்)

7. பொருத்தமான காலம் கண்டறிக:
(அ) நாங்கள் வருவோம் (நிகழ்காலம்) (ஆ) அவன் வருகிறான் (இறந்த காலம்)
**(இ) அவை வருகின்றன (நிகழ்காலம்)** (ஈ) அது வந்தது (எதிர்காலம்)

8. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு:
பின்வருவனவற்றுள் பேச்சு வழக்கு அல்லாத தொடரைக் கண்டறிக:
(அ) முருகா, வந்தியா? (ஆ) முருகா, வண்ட்டியா?
**(இ) முருகா, வந்துவிட்டாயா?** (ஈ) முருகா, வந்துட்டியா?

9. சரியான நிறுத்தக்குறிகளை உடைய சொல்லைக் கண்டறிக:
(அ) காகத்திற்கு காது உண்டா! அதற்கு காது கேட்குமா?
(ஆ) காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா!
**(இ) காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?**
(ஈ) காகத்திற்கு காது உண்டா! அதற்கு காது கேட்குமா!

10. ஒரே எழுவாயில் பல வாக்கியங்களை தொடரும் இடத்தில் ------ வரும்
**(அ) அரைப்புள்ளி (;)** (ஆ) முக்காற்புள்ளி (:) (இ) முற்றுப்புள்ளி (.) (ஈ) வினாக்குறி (?)

11.வியப்புக்குறி இட வேண்டிய சரியான தொடரைக் கண்டறிக:
(அ) இயல் இசை நாடகம் (ஆ) நல்லவன் வாழ்வான்

**(இ) தமிழின் இனிமைதான் என்னே** (ஈ) சேக்கிழார் எழுதிய நூல் எது

12. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?
**(அ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர்**
(ஆ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்
(இ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தன
(ஈ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தது

13. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?
(அ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
(ஆ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர்.
**(இ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.**
(ஈ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருப்பவை.

14. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?
(அ) இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றது.
**(ஆ) இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றவை**
(இ) இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றன.
(ஈ) இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றனர்

15. பிழை திருத்துதல்:
(ஒரு – ஓர்) (ஒரு–ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க)
(அ) ஒரு அணில் மரத்தில் ஏறின (ஆ) ஓர் அணில் மரத்தில் ஏறின
**(இ) ஓர் அணில் மரத்தில் ஏறியது** (ஈ) ஒரு அணில் மரத்தில் ஏறியது

16. சரியான தொடரைத் தேர்ந்தெடு:
தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன.
இது – எவ்வகைத் தொடர்?
(அ) வினாத்தொடர் (ஆ) கட்டளைத் தொடர்
**(இ) செய்தித்தொடர்** (ஈ) உணர்ச்சித் தொடர்

17. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
**(அ) நீலாம்பிகை அம்மையார் மறைமலை அடிகளின் மகள் ஆவார்**
(ஆ) நீலாம்பிகை அம்மையார் மகள் மறைமலை அடிகள் ஆவார்
(இ) மறைமலை அடிகளாரின் நீலாம்பிகை அம்மையார் மகள் ஆவார்
(ஈ) மறைமலை அடிகளாரின் மகள் ஆவார் நீலாம்பிகை அம்மையார்

18. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க:
**(அ) பழங்குடியினர் இயற்கையைப் போற்றும் உணர்வினைக் கொண்டிருந்தனர்**
(ஆ) இயற்கையைப் போற்றும் உணர்வினை பழங்குடியினர் இருந்தனர் கொண்டு
(இ) பழங்குடியினர் உணர்வினைக் கொண்டு இருந்தனர் இயற்கையைப் போற்றும்
(ஈ) உணர்வினை பழங்குடியினர் கொண்டிருந்தனர் இயற்கையைப் போற்றும்

19. கலைச்சொல் அறிதல்:
ESCALATOR
(அ) மின்தூக்கி **(ஆ) மின்படிக்கட்டு** (இ) மின்னஞ்சல் (ஈ) மின்நூல்

20. கூற்று: த், ந் – ஆகிய எழுத்துகள் இன எழுத்துகள் ஆகும். இவற்றை "நட்பெழுத்துகள்" எனவும் கூறுவர்.
காரணம்: த், ந் – இவ்விரண்டெடுத்தும் நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் பிறக்கின்றன.
**(அ) கூற்று, காரணம் – இரண்டும் சரி** (ஆ) கூற்று சரி, காரணம் தவறு

(இ) கூற்று தவறு, காரணம் சரி (ஈ) கூற்று, காரணம் – இரண்டும் தவறு

21. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக: சிலை – சீலை
(அ) ஓவியம் – வண்ணம் **(ஆ) இறைவன் திருவுருவம்–துணி**
(இ) மணல் – குன்று (ஈ) மறை – வேதம்

22. இருபொருள் தருக:
திங்கள்
(அ) அறிவு, சந்திரன் (ஆ) அணி, மாதம் **(இ) நிலவு, மாதம்** (ஈ) உடல், நிலவு

23. சரியான இணையைத் தேர்க:
1. முகநூல் – App
2. மின்னஞ்சல் – Search Engine
3. செயலி – Touch Screen
4. புலனம் – Whatsapp
(அ) 3 (ஆ) 2 (இ) 1 **(ஈ) 4**

24. எதிர்ச்சொல்லை எடுத்தெழுது:
ஊக்கம்
(அ) உற்சாகம் **(ஆ) சோர்வு** (இ) உடைமை (ஈ) மயக்கம்

25. சேர்த்தெழுதுதல்:
பொங்கல் + அன்று என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல்
**(அ) பொங்கலன்று** (ஆ) பொங்கல் அன்று (இ) பொங்கலென்று (ஈ) பொங்கஅன்று

26. "படிப்பறிவு" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
(அ) படி + அறிவு **(ஆ) படிப்பு + அறிவு** (இ) படி + வறிவு (ஈ) படிப்பு + வறிவு

27. "தற்பவம்" சொல்லைக் கண்டறிக:
(அ) லட்கூமி (ஆ) கமலம் **(ஈ) இலக்குமி** (ஈ) அலங்காரம்

28. ஆங்கிலச்சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்க:
Agency
**(அ) முகவாண்மை** (ஆ) முகவர் (இ) தானியங்கி (ஈ) அஞ்சலகம்

29. ஆங்கிலச்சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுது:.
ஆன்லைன் ஷாப்பிங் (Online Shopping)
(அ) மின்னணு வணிகம் **(ஆ) இணையத்தள வணிகம்**
(இ) மின்னணுமயம் (ஈ) இணையம்

30. விடை வகைகள்:
"கடைக்குப் போவாயா" என்ற கேள்விக்குப் "போவேன்" என்று உடன்பாட்டுக் கூறல்
**(அ) நேர்விடை** (ஆ) ஏவல் விடை
(இ) உற்றது உரைத்தல் விடை (ஈ) சுட்டுவிடை

31. "காஸ்மிக் ரேய்ஸ்" என்பது
**(அ) புற ஊதாக் கதிர்கள்** (ஆ) அகச்சிவப்புக் கதிர்கள்
(இ) விண்வெளிக் கதிர்கள் (ஈ) சூரியக் கதிர்கள்

32. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்:
"கமலா சிலப்பதிகாரம் கற்றாள்"

winmeen.com

(அ) முற்றுவினை வாக்கியம் (ஆ) பிறவினை வாக்கியம்
**(இ) செய்வினை வாக்கியம்** (ஈ) செயப்பாட்டுவினை வாக்கியம்

33. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக:
**(அ) ஆசிரியர் பாடம் படிப்பித்தார்** (ஆ) ஆசிரியர் பாடம் படித்தார்
(இ) ஆசிரியர் பாடம் படித்தாரா? (ஈ) ஆசிரியர் பாடம் படிக்கிறார்

34. சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி–விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:
**(அ) சாலை விதிகளில் முதன்மையான விதி எது?** (அ) சாலை விதிகள் யாவை?
(இ) சாலை விதி என்றால் என்ன? (ஈ) சாலைகளின் இடப்பக்க விதி யாது?

35. "திருநின்றவூர்" எனும் ஊர்ப்பெயரின் மரூஉ எதுவெனக் கண்டறிக:
(அ) திருவூர் (ஆ) தேரூர் (இ) நின்றவூர் **(ஈ) தின்னனூர்**

36. சரியான தொடரைத் தேர்ந்தெடு:
விரிந்தது–விரித்தது
**(அ) மழை பெய்ததால், பூவின் இதழ் விரிந்தது, மயில் தோகையை விரித்தது**
(ஆ) மழை பெய்ததால், பூவின் இதழ் விரித்தது, மயில் தோகையை விரித்தது
(இ) மழை பெய்ததால், பூவின் இதழ் விரிந்தது, மயில் தோகையை விரிந்தது
(ஈ) மழை பெய்ததால், பூவின் இதழ் விரித்தது, மயில் தோகையை விரிந்தது

37. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டு பொருத்துக:
அ. Guild – 1. நிலப்பகுதி.
ஆ. Patent – 2. துணைத்தூதரகம்.
இ. Consulate – 3. காப்புரிமை.
ஈ. Territory – 4. வணிகக்குழு

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| ஆ | 2 | 4 | 1 | 3 |
| **இ.** | **4** | **3** | **2** | **1** |
| ஈ. | 3 | 4 | 1 | 2 |

38. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்:
சொற்களை ஒழுங்குபடுத்துக:
(அ) அறக்கோட்டமாக சிறைக் கோட்டத்தை மன்னன் வேண்டினான் மாற்ற
**(ஆ) சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினான்**
(இ) மன்ன் அறக்கோட்டமாக மாற்ற சிறைக்கோட்டத்தை வேண்டினான்
(ஈ) மன்னன் வேண்டினான் அறக்கோட்டத்தை சிறைக்கோட்டமாக மாற்றினான்.

39. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்:
(அ) வெய்யோ பொய்யோ மையோ ஐயோ **(ஆ) ஐயோ பொய்யோ மையோ வெய்யோ**
(இ) பொய்யோ ஐயோ மையோ வெய்யோ (ஈ) வெய்யோ மையோ ஐயோ பொய்யோ

40. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:
(அ) அவிழ் அலரி அசைத்த அரும்பு (ஆ) அரும்பு அவிழ் அசைத்த அலரி
(அ) அலரி அசைத்த அவிழ் அரும்பு **(ஈ) அசைத்த அரும்பு அலரி அவிழ்**

41. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:
(அ) கிளை கழை குச்சி கொழுந்தாடை **(ஆ) கழை கிளை குச்சி கொழுந்தாடை**
(இ) கொழுந்தாடை குச்சி கிளை கழை (ஈ) குச்சி கழை கிளை கொழுந்தாடை



winmeen.com

42. "பௌவம்" என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க:
(அ) முந்நீர் (ஆ) கடல் (இ) ஆழி **(ஈ) ஊழி**

43. தாவரத்தின் இளம் பயர் வகையை சுட்டாத சொல் எது?
(அ) நாற்று **(ஆ) இளநீர்** (இ) குருத்து (ஈ) பிள்ளை

44. நிலவகை அல்லாத சொல்லைக் கண்டறிக:
(அ) தரிசு **(ஆ) பரிசு** (இ) சுவல் (ஈ) அவல்

45. வலி, வளி, வழி–ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக:
**(அ) துன்பம், காற்று, நெறி** (ஆ) காற்று, நெறி, துன்பம்
(இ) நெறி, காற்று, துன்பம் (ஈ) துன்பம், நெறி, காற்று

46. CIVILIZATION என்பதன் தமிழாக்கம்
(அ) வேளாண்மை **(ஆ) நாகரிகம்** (இ) பயிரிடுதல் (ஈ) உழவியல்

47. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எழுது:
SUBMARINE
(அ) கப்பல் (ஆ) கலங்கரை விளக்கம் **(இ) நீர்மூழ்கிக் கப்பல்** (ஈ) துறைமுகம்

48. இவ்வாக்கியத்தில் உள்ள பிழையை நீக்குக:
(அ) என் மணம் இகல்ந்தால் இறந்து விடாது! **(ஆ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது!**
(இ) இரந்து விடாது என் மனம் இகழ்ந்தால்! (ஈ) என் மனம் இரந்தும் இகழ்ந்து விடாது!

49. சந்திப் பிழையற்ற தொடர் எது?
**(அ) கைவினைக் கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்**
(ஆ) கைவினைக் கலைகளுள் ஒன்றை கற்று கொள்வேன்
(இ) கைவினைக் கலைகளுள் ஒன்றைக் கற்று கொள்வேன்
(ஈ) கைவினைக் கலைகளுள் ஒன்றை கற்றுக் கொள்வேன்

50. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?
விளக்கு – இருபொருள்
(அ) 1. இலக்கணப்பாடத்தை விளக்கிக்கூறு.
2. இளமையில் கல்.
(ஆ) 1. விளக்கை அணைத்து விடு.
2. கற்களால் ஆனது கோபுரம்.
(இ) 1. நல்ல நூல்களைப் படி.
2. ஆறு கால்களை உடையது ஈ
**(ஈ) 1. இலக்கணப்பாடத்தை விளக்கிக் கூறு.**
**2. விளக்கை அணைத்து விடு**

51. ஆறு – இச்சொல்லுக்கு இருபொருள் தருக:
(அ) ஆறுதல்–நதி **(ஆ) நதி–எண்** (இ) பொறுத்தல்–மனம் (ஈ) நதி–கடல்

52. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க:
(மணிமேகலை)
(அ) எட்டுத்தொகை நூல்களில் ஒன்று –––––– (ஆ) பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று –––––––
**(இ) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று –––––––––** (ஈ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று –––––

53. பொருத்தமான இணைப்புச் சொல்லுடன் தொடரை அமைக்க:

மழை நன்கு பெய்தது --------- எங்களால் விள்யாட முடியவில்லை
(அ) மழை நன்கு பெய்தது. எனென்றால் எங்களால் விளையாட முடியவில்லை
**(ஆ) மழை நன்கு பெய்தது. எனவே, எங்களால் விளையாட முடியவில்லை**
(இ) மழை நன்கு பெய்தது. மேலும் எங்களால் விளையாட முடியவில்லை
(ஈ) மழை நன்கு பெய்தது. ஏனெனில் எங்களால் விளையாட முடியவில்லை

54. பொருத்தமான இணைப்புச் சொல்லைக் கண்டறிக:
அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ----------- அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது.
(அ) எனவே (ஆ) ஆகையால் (இ) அதுபோல **(ஈ) ஏனெனில்**

55. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு:
அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர்
(அ) எவர் (ஆ) யாவர் (இ) யாரால் **(ஈ) யார்**

56. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு:
ஐம்பெருங்காப்பியங்கள் ---------
(அ) என்ன (ஆ) எது **(இ) யாவை** (ஈ) யாது

57. சொற்களை இணைத்து புதிய சொல்லை உருவாக்கல்:
சிங்கம் -------- சரியான சொல்
(அ) உறுமும் **(ஆ) முழங்கும்** (இ) பிளிறும் (ஈ) கத்தும்

58. பொருத்தமான மரபுச் சொல்லைத் தேர்ந்தெழுதுக:
ஆட்டு -------- வருகிறது
(அ) கூட்டம் **(ஆ) மந்தை** (இ) இனம் (ஈ) நிரை

59. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்:
புலியின் இளமைப் பெயர்
**(அ) பறழ்** (ஆ) குருளை (இ) கன்று (ஈ) குஞ்சு

60. கீழ்வருவனவற்றுள் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு சொற்களை கண்டுபிடி:
(அ) வருவியா?–வந்ததா? (ஆ) வந்தாய்–வருவாய்
**(இ) வந்தியா–வந்தாயா?** (ஈ) வருகிறாய்–வருவாய்

61. வாயில் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் ------------ என வழங்குகிறோம்
(அ) கதவு (ஆ) நிலைப்படி (இ) நுழையும் வழி **(ஈ) வாசல்**

62. பத்தியைப் படித்து வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடு:

முகிலன் பொங்கல் விழா கொண்டாடத் தாத்தா வீட்டிற்குச் சென்றான். அங்கு செவலை என்ற காளை இருந்தது. அக்காளையை முகிலனுக்கு மிகவும் பிடிக்கும். ஆதற்குத் தீவனம் வைப்பது அவனது வழக்கம். வீட்டிற்குப் பின்புறம் உள்ள தோட்டத்தில் இருந்து காய்கறிகள் பறித்துக் கொடுத்துத் தாத்தாவுக்கு உதவுவான். அவன், தாத்தா பாட்டியோடு மகிழ்வாகப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவான்

62. முகிலன் யார் வீட்டிற்குச் சென்றான்?
(அ) மாமா **(ஆ) தாத்தா** (இ) அக்கா (ஈ) சித்தி

63. தாத்தா வீட்டிலுள்ள காளையின் பெயர் என்ன?
(அ) கொற்றன் (ஆ) முகிலன் (இ) லட்சுமி **(ஈ) செவலை**

64. முகிலன் எவ்விழாவைக் கொண்டாட தாத்தா வீட்டிற்குச் சென்றான்?

**(அ) பொங்கல்** (ஆ) தீபாவளி (இ) கிறிஸ்துமஸ் (ஆ) பக்ரீத்

65. முகிலன் தோட்டத்தில் இருந்து எதை பறித்துக் கொடுத்து தாத்தாவுக்கு உதவுவான்?

(அ) பழங்கள் (ஆ) கீரைகள் **(இ) காய்கறிகள்** (ஈ) பூக்கள்

66. "செவலை" என்பது எதைக் குறிக்கிறது?

**(அ) காளை** (ஆ) பசு (இ) நாய் (ஈ) பூனை

67. சொல்–பொருள் பொருத்துக:

அ. குருளை 1. முலை

ஆ. கல் 2. குட்டி

இ. மல்லல் 3. வயல்

ஈ. செறு 4. வளம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 4 | 1 | 3 |
| ஆ. | 4 | 3 | 2 | 1 |
| **இ.** | **2** | **1** | **4** | **3** |
| ஈ. | 2 | 1 | 3 | 4 |

68. சொல்–பொருள் பொருத்துக:

அ. மட்டு 1. நாள்தோறும்

ஆ. வையம் 2. பாதுகாத்தல்

இ. பேணி 3. அளவு

ஈ. நித்தம் நித்தம் 4. ஊலகம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **3** | **4** | **2** | **1** |
| இ. | 4 | 3 | 2 | 1 |
| ஈ. | 4 | 3 | 1 | 2 |

69. சொல்–பொருள் பொருத்துக:

அ. கருணை 1. மழை

ஆ. மாரி 2. உலகம்

இ. பூதலம் 3. வயிறு

ஈ. கும்பி 4. இரக்கம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 4 | 2 |
| ஆ. | 4 | 1 | 3 | 2 |
| **இ.** | **4** | **1** | **2** | **3** |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

70. பின்வருவனவற்றுள் சரியான இணைகளைக் குறிப்பிடுக:

அ. புல் புற்கள்

ஆ. சொல் சொல்கள்

இ. பூ பூக்கள்

ஈ. மாதம் மாதக்கள்

(அ) அ, ஆ (ஆ) இ, ஈ **(இ) அ, இ** (ஈ) ஆ, ஈ

71. காரணப் பெயருக்கு எடுத்துக்காட்டினைத் தேர்ந்தெடுக்க:

(அ) மரம் (ஆ) மண் **(இ) நாற்காலி** (ஈ) காற்று

72. கலைச்சொல் அறிதல்:
HERO STONE
**(அ) நடுகல்** (ஆ) பொறிப்பு (இ) அகழாய்வு (ஈ) கல்வெட்டியல்

73. கலைச்சொல் அறிதல்:
MEDIA
**(அ) ஊடகம்** (ஆ) இதழியல் (ஈ) மொழியியல் (ஈ) பருவ இதழ்

74. வழுஉச் சொல்லற்ற தொடர் எது?
(அ) ஊசியில் நூலைக் கோர்த்தான் (ஆ) ஊசியில் நூலைக் கோர்ப்பான்
**(இ) ஊசியில் நூலைக் கோத்தான்** (ஈ) ஊசியில் நூலைக் கோர்க்கலாம்

75. வழுவற்ற தொடர் எது?
(அ) அதைச் செய்தது நான் அன்று (ஆ) அதைச் செய்தது நான் அல்ல
**(இ) அதைச் செய்தது நான் அல்லேன்** (ஈ) அதைச் செய்தது நான் அல்லை

76. பொருந்தும் இணையைக் காண்க:
(அ) கரி–குதிi (ஆ) அருவர்–காலன் **(இ) பிலம்–மலைக்குகை** (ஈ) மறலி–புதர்

77. பொருந்தாச் சொல்லைக் காண்க:
(அ) உம் (ஆ) ஐ (இ) மற்று **(ஈ) மா**

78. "பாட்டு + இருக்கும்" என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
**(அ) பாட்டிருக்கும்** (ஆ) பாட்டுருக்கும் (இ) படியிருக்கும் (ஈ) பாடியிருக்கும்

79. குடந்தை ––––––– என்பதன் மரூஉ
(அ) குடகு (ஆ) கும்பை **(இ) கும்பகோணம்** (ஈ) குளித்தலை

80. தவறான ஊர்ப் பெயரின் மருஉவை எழுதுக:
(அ) உதகமண்டலம் – உதகை
**(ஆ) புதுச்சேரி – புதுகை**
(இ) மன்னார்குடி – மன்னை
(ஈ) திருநெல்வேலி – நெல்லை

81. சரியான ஊர்ப்பெயரின் மரூஉச்சொல்லைத் தேர்ந்தெடு:
(அ) புதுவை – புதுக்கோட்டை
(ஆ) புதுகை – புதுச்சேரி
**(இ) நாகை – நாகப்பட்டினம்**
(ஈ) மயிலம் – மயிலாடுதுறை

82. "கான்வர்சேஷன்" என்பது
**(அ) உரையாடல்** (ஆ) கலந்துரையாடல் (இ) பேசுதல் (ஈ) கூடிப்பேசுதல்

83. பிலாஸஃபர் (Philosopher) என்பவர்
(அ) பத்திரிக்கையாளர் **(ஆ) மெய்யியலாளர்** (இ) எழுத்தாளர் (ஈ) நெறியாளர்

84. "நிலவும் வானும் போல" – இவ்வுவமை கூறும் பொருள் விளக்கம்:
(அ) பண்புடைமை (ஆ) பணிவுடைமை (இ) வேற்றுமை **(ஈ) ஒற்றுமை**

85. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்:



winmeen.com

"பாட்டு கபிலனால் பாடப்பட்டது"

(அ) உடன்பாட்டு வாக்கியம்

(ஆ) தன்வினை வாக்கியம்

(இ) எதிர்மறை வாக்கியம்

**(ஈ) செயப்பாட்டுவினை வாக்கியம்**

86. தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க:

(அ) மாணவன் மனம் திருத்தினான்

**(ஆ) மாணவன் மனம் திருந்தினான்**

(இ) மாணவன் மனம் திருந்தினானா?

(ஈ) மாணவன் மனம் திருந்தச் செய்தான்

87. ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, போலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன?

விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:

(அ) ஒயிலாட்டத்தில் எந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?

**(ஆ) ஒயிலாட்டத்தில் எந்தெந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?**

(இ) ஒயிலாட்டத்தில் எவ்வாறான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?

(ஈ) ஒயிலாட்டத்தில் எதற்கான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?

88. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:

பாரதியார் மகாகவி என அழைக்கப்படுகிறார்.

(அ) பாரதியார் இயற்பெயர் யாது?

(ஆ) மகாகவி பாரதியா?

**(இ) பாரதியார் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

(ஈ) மகாகவி யார்?

89. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:

பெருஞ்சித்திரனார் பாவலரேறு என்று அழைக்கப்படுகிறார்

(அ) பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது?

(ஆ) பாவலரேறு யார்?

(இ) ஏன் பாவலரேறு என அழைக்கப்படுகிறார்?

**(ஈ) பெருஞ்சித்திரனார் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

90. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்:

சொற்களை ஒழுங்குபடுத்துக:

**(அ) மணிமேகலை மணிபல்லவத்தீவிற்குச் சென்றாள்**

(ஆ) மணிபல்லவத்தீவிற்குச் சென்றாள் மணிமேகலை

(இ) மணிமேகலை சென்றாள் மணிபல்லவத்தீவிற்கு

(ஈ) பல்லவத்தீவிற்கு மணி மணிமேகலை சென்றாள்

91. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்:

சொற்களை ஒழுங்குபடுத்துக:

(அ) முளையிலே விளையும் தெரியும் பயிர்

**(ஆ) விளையும் பயிர் முளையிலே தெரியும்**

(இ) பயிர் விளையும் முளையிலே தெரியும்

(ஈ) முளையிலே தெரியும் விளையும் பயிர்

92. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்:

சொற்களை ஒழுங்குபடுத்துக:

(அ) ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

**(ஆ) கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்**

(இ) இல்லாமை ஆக்குவோம் கல்லாமையை

(ஈ) இல்லாமை கல்லாமையை ஆக்குவோம்

93. வா–என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரை எழுதுக:

**(அ) வந்தவர்** (ஆ) வந்தான் (இ) வருதல் (ஈ) வந்த

94.அழை–என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறி:

(அ) அழைத்த (ஆ) அழைத்து **(இ) அழைத்தல்** (ஈ) அழைத்தான்



winmeen.com

95. வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக: "பெறு"

**(அ) பெற்று** (ஆ) பெற்றவன் (இ) பெறுதல் (ஈ) பெற்றான்

96. வருக–வேர்ச்சொல்லைத் தருக

(அ) வரு (ஆ) வருதல் **(இ) வா** (ஈ) வந்த

97. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக:

(அ) ஒலி–நீங்கு **(ஆ) ஒளி–வெளிச்சம்** (இ) ஒழி–சீற்றம் (ஈ) கழி–சத்தம்

98. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க:

1. நேர்விடை – ஆடுவேன்
2. உற்றது உரைத்தல் விடை – கால் வலிக்கும்
3. ஏவல் விடை – நீயே செய்
4.சுட்டுவிடை – தலை வலிக்கிறது

**(அ) 1, 3** (ஆ) 1, 4 (இ) 2, 3 (ஈ) 2, 4

99. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை அறிதல்:

கம்ப்யூட்டர் (Computer) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

(அ) மின்னணி **(ஆ) கணினி** (இ) கனினி (ஈ) மின்னஞ்சல்

100. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைப் பொருத்துக:

அ. Volunteer 1. சமூக சீர்திருத்தவாதி.
ஆ. Social Reformer 2. வெளிநாட்டவர்.
இ. Entrepreneur 3. தன்னார்வலர்.
ஈ. Foreigner 4. தொழில் முனைவோர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 3 | 4 | 1 |
| ஆ. | 4 | 2 | 1 | 3 |
| **இ.** | **3** | **1** | **4** | **2** |
| ஈ. | 1 | 4 | 2 | 3 |

winmeen.com